## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 262/மா/2022**
**நாள் : 07.05.2023**

திரு. N. தமிழரசு,
சென்னை–600 097. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் 10.12.2022 நாளிட்ட மனு 12.12.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 262/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, OMR, மேட்டுக்குப்பம், பிள்ளையார் கோயில் தெரு, எண்.3/752, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. தமிழரசு, என்பவரின் முறையீட்டு மனுவில் :

I have sent a complaint to the said respondents, that "The State Government has banned placing of hoarding and renting of hoardings in view to the public. But inspite of the aforesaid banning, the BSR Mall, it comes under Ward No.193, Zone 15 Greater Chennai Corporation, has placed hoarding in OMR (near Thoraipakkam signal) to market products of a Royal Estate Company which is completely unauthorized and punishable. Therefore, I request you to take necessary action against the unauthorized illegal hoardings" but no actjon was taken on my complaint so far.

Therefore, I request you to direct them to take necessary action on my complaint.

Further, I request you take appropriate action against the respondents for not action taken on my complaint within the timeline.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 15ன் மண்டல அலுவலர், செயற் பொறியாளர் (ம) உதவி செயற் பொறியாளர் ஆகியோரிடம் 21.12.2022 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15ன் மண்டல அலுவலர் 02.05.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 15, பகுதி-45, கோட்டம்-193, துரைப்பாக்கம் பகுதியில் உள்ள OMR மற்றும் பல்லாவரம் இணைப்பு சாலை அருகில் அமைந்துள்ள BSR Mall-க்கு உரிமையான இடத்தில் Hoarding Board அமைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை அப்புறப்படுத்துமாறும் PGR No.2022-137 MGL நாள்: 11.11.2022ல் புகார் மனு மாநகராட்சிக்கும் மற்றும் 09.12.2022 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார்.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில் மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தினை கள ஆய்வு செய்ததில், அவ்விடத்தில் சுமார் 30 அடி உயரத்தில் Single pole steel structure மூலம் அதற்குரிய Design-ன்படி Structure அமைக்கப்பட்டு அதில் விளம்பர அறிவிப்பு பலகை உள்ளது எனக் கண்டறியப்பட்டது.

இதைத் தொடர்ந்து BSR நிறுவனத்தில் விசாரணை மேற்கொண்டபோது, அவ்விடத்தில் அமைக்கப்பட்ட Hoarding and Structure Ms. Chennai Hoarding Association மூலமாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மேலும் இது தொடர்பாக M/s. Chennai Hoarding நிறுவனத்தில் விசாரிக்கும்போது இவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள Hoarding-க்கு தற்போது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.20129-2021 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், அவ்வழக்கின் Prayer ஆக "...to direct the respondents 3 to 6 not to remove / dismantle any Hoardings of the petitioner's Members until the new laws for regulating Hoardings are framed and render justice..."

And for which. Hon'ble High Court has passed an order on 25.3.2022 and states that.

"there shall be an order of status quo maintainable as on date until further order in W.P.Nos 20129, 22094, & 22099 of 2021 and W.M.P. Nos.21403, 23314 & 23321 of 2021."

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் அலுவலர் அவர்களின் கடிதம் தே.மு.க.வ.து.ந.க.எண்.ஜி4/007307/2022, 03.11.2022 நாளிட்ட கடிதத்தின்படி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்ட நிறுவனங்களால் நிறுவப்படும் விளம்பரப் பலகைகளுக்கு

2104-2022 நாளிட்ட விசாரணையின் போது இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் அவ்விளம்பர பலகைகளை (ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விளம்பர பலகையின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) அகற்றப்பட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| S.No. | Name of Advertiser | W.P.No. |
|---|---|---|
| 1. | M.S.Focus Media | 25220/2018 |
| 2. | M.S.I. Uminas India Associate | 25221/2018 |
| 3. | Chennai Hoardings Association | 20129/2021 |
| 4. | And Others 10 Organisation | |

மேற்கூறப்பட்ட வழக்கின் இடைக்கால தீர்ப்பு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் அலுவலர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் துரைப்பாக்கம் சென்னை 97ல் 2021ம் வருடம் முதல் Chennai Hoarding Association நிறுவனம் மூலம் BSR Mallல் அமைக்கப்பட்டுள்ள Hoarding வைப்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ளதால் திரு.N. தமிழரசு அவர்கள் இணையதளம் மூலம் அளிக்கப்பட்ட PGR (1913) Complaint No.137 MGL-க்கு, 28.12.2022 அன்று இணைய தளம் மூலமாக பதில் அனுப்பப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக முடிவுக்கு வந்துள்ளது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது அதன் நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்."

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 27.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.04.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 27.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15 துரைப்பாக்கம் சிக்னல் அருகே சாலையின் மேற்புறத்தில் வணிக ரீதியாக விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. விளம்பரப் பலகைகளை சாலையில் இடம்பெறுவதை அரசால் தடை செய்யப்பட்டிருந்தும், மேற்கண்ட விளம்பரப் பலகைகளை தனியார் நிறுவியுள்ளனர். இதனால், விளம்பரப் பலகையின் கீழ் நடமாடும் பொதுமக்கள் அச்ச உணர்வுடன் நடமாடுகின்றனர். மேலும், அங்குள்ள விளம்பரப் பலகையால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. மேற்கண்ட விளம்பரப் பலகைகள் குறித்து மாநகராட்சிக்கு தெரிவித்து, அவ்விளம்பரப் பலகைகளை அகற்றிடுமாறு மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால், அம்மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட துரைப்பாக்கம் சிக்னல் அருகே உள்ள சாலையில் இடம்பெற்றுள்ள விளம்பரப் பலகைகள் அனைத்தையும் அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவி பொறியாளர் 02.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மண்டலம் 15 துரைப்பாக்கம் பகுதியில் உள்ள OMR மற்றும் பல்லாவரம் இணைப்புச் சாலையில் அமைந்துள்ள இடத்தில் உள்ள விளம்பரப் பலகைகள் குறித்து நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அதில் 30 அடி உயரத்தில் Structure அமைக்கப்பட்ட விளம்பர அறிவிப்பு பலகைகள் உள்ளதை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக ஆணையரின் உத்தரவின் பேரில் மேற்கண்ட விளம்பரப் பலகையை அகற்றிட 1.9.2021ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனை எதிர்த்து Hoarding and Structure M/s Chennai Hoarding Association சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட (வழக்கு எண் 20129/2021) அவ்வழக்கில் தற்போதைய நிலையே தொடர (Status quo) 25.3.2022 நாளிட்ட உத்தரவில் ஆணையிடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட வழக்கு தற்போதுவரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் – 15 அவர்களால் இம்முறை மன்றத்தில் அளிக்கப்படும் 2.5.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் –15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.**

சென்னை மேட்டுக்குப்பத்தை சேர்ந்த திரு. N. தமிழரசு, துரைப்பாக்கம் பகுதியில் உள்ள OMR மற்றும் இணைப்பு சாலை அருகில் BSR Mall-ல் Hoarding Board அமைக்கப்பட்டுள்ளதால், அங்கு அச்சத்துடன் நடமாடுகிறார்கள் என்றும் அதனை அகற்றிட உத்திரவு வழங்கிட கோரியுள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி பொறியாளரின் வாக்குமூலத்தில், விளம்பர பலகைகளை அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் 1.9.2021 நாளிட்டு உத்திரவு பிறப்பித்தார் எனவும், இதனை எதிர்த்து Hoarding and Structure M/s. Chennai Hoarding Association சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு என 20129/2021 தொடரப்பட்டு, அவ்வழக்கில் மாண்பமை உயர்நீதிமன்றம் தற்போதைய நிலையே தொடர (Status Quo – Maintainable as on date) 25.3.2022 நாளிட்ட ஆணையில் உத்திரவிட்டுள்ளது எனவும், அவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

மேற்கண்டச் சூழ்நிலையில், மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் தெரிவித்த BSR Mallல் உள்ள Hoardingஐ அகற்ற வேண்டும் என்ற நேர்வில், M/s. Chennai Hoarding Association சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்20129/2021 தொடரப்பட்டு, அவ்வழக்கில் மாண்பமை உயர்நீதிமன்றம் Statue Quo தொடர உத்திரவிட்டும், தற்போது வரை நிலுவையில் உள்ளது. எனவே, 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 10 (3) (b)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு

நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல்கூடாது என்ற அடிப்படையில் இம்மனு மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. N. தமிழரசு,
   வழக்கறிஞர்,
   எண்.3/752, பிள்ளையார் கோவில் தெரு,
   மேட்டுக்குப்பம் (OMR) சென்னை – 600 097.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம்–15, பெருநகர சென்னை மாநகராட்சி,
   120, ராஜீவ் காந்தி சாலை, சோளிங்கநல்லூர்,
   (பழைய மகாபல்லிபுரம் சாலை), சென்னை – 600 119.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.